நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## Crl.M.P. No. 702 /2025

**(சத்திய பிரமாண வாக்குமூலம்)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மகேஸ்வரி |
| தந்தை / கணவர் பெயர் | : | உமாநாத் |
| கிராமம் | : | கர்நாடகா மாநிலம், கோபிநந்தம் |
| வட்டம் | : | அனூர் |
| மாவட்டம் | : | சம்ராஜ் நகர் |
| சாட்சி வரிசை எண் | : | **சத்திய பிரமாண வாக்குமூலம்** |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 23–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.43PM.

1. நான் தற்போது கர்நாடகா மாநிலம், கோபிநத்தம் பகுதியில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். எனது கணவர் உமாநாத், மற்றும் எனது கணவர் இரண்டாவதாக திருமணம் செய்த கொண்ட வினித்ரா மற்றும் அவருடைய அப்பா சந்துரு, வினித்ராவின் அம்மா நல்லம்மாள் ஆகியோருக்கு எதிராக முதல் திருமணம் அமலில் இருக்கும்போது இரண்டாவது திருமணம் செய்து கொண்டதற்காகவும், செய்து வைத்துதற்காகவும் நடவடிக்கை கோரி இந்த புகாரை தாக்கல் செய்கிறேன்.

2. எனக்கும், எனது கணவருக்கும் கடந்த 01.11.2009ம் தேதி கொளத்தூர் லட்சுமி திருமண மண்டபத்தில் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெற்றது. அந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு திருமணத்தின்போது எனது கணவருக்கு ரொக்கமாக ரூபாய். 50,000/– மேலும் 6 பவுன் தங்க செயின், பிரேஸ்லெட் 2 பவுண், எனக்கு ஆரம் 5 பவுன், நெக்லஸ் 3 பவுன், மற்றும் தோடு 1 பவுன், மாட்டில் 1 பவுன் மற்றும் சில்லரை நகைகள் 1 பவுன் மொத்தம் எனக்கு 11 பவுன் எனது கணவருக்கு 8 பவுன் வரதட்சனையாக கொடுத்தார்கள். திருமண செலவு எனது அப்பா ரூபாய் 5,00,000/– செலவு செய்தார்.

3. திருமணத்தின் பயனான எனக்கும் எனது கணவருக்கும் 22.03.2012ம் தேதியில் சபிதா என்ற பெண் குழந்தையும், 07.07.2013ம் தேதியில் சஞ்சய் என்ற ஆண் குழந்தையும் பிறந்துள்ளனர். மேற்படி இருவரின் பிறப்பு சான்றிதழின் நகல்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். திருமணம் ஆகி 7 ஆண்டுகள் ஒன்றாக இருந்தோம். அவ்வப்போது குடித்துவிட்டு வந்து பிரச்சினை செய்து வந்தார். அதன் பின்னிட்டு எனது பெற்றோர் பராமரிப்பில் நானும், எனது குழந்தைகளும் வாழ்ந்து வருகிறோம்.

4. மேற்படி நாங்கள் ஒன்றாக வாழ்ந்த காலத்திலேயே ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து பெற்ற வினித்ராவுடன் போன் பேசி வருவதை நான் தெரிந்து கொண்டேன். மேற்படி வினித்ரா மேச்சேரி அருகில் கீரைக்காரனூர் பகுதியில் குடியிருக்கிறார். நாங்கள் கொளத்தூரில் பழக்கடை ,ஜூஸ் கடை வைத்து தொழில் செய்து வந்தோம். மேலும் எனது கணவர் வீடு, வீடாக தண்ணீர் கேன் சப்ளை செய்வது வழக்கம்.அந்த வகையில் பழக்கம் ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

5. அது குறித்து நான் கேட்டபோது என்னை அடித்து கொடுமை செய்ய ஆரம்பித்தார். மேற்படி நான் எனது பெற்றோர் வீட்டிற்கு வந்த பிறகு எனது கணவர் சார்பு நீதிமன்றத்தில் காரணமே இல்லாமல் விவாகரத்து கோரி எச்.எம்.ஓ.பி.எண். 132/2017 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் நான் எனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் உரை தாக்கல் செய்தேன். மேலும் சேர்ந்து வாழ கேட்டு அதே வழக்கில் IA. 3/2023 என்ற

மனுவையும் தாக்கல் செய்தேன். அந்த மனு தொடர்பான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

6. அதன்பின்னிட்டு கொள்ளேகால் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு மனு தாக்கல் செய்து எனக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அவர் ஜீவனாம்ச தொகையை வாரண்ட் பிறப்பிக்கப்பட்டால் மட்டும் அவ்வப்போது ஏதேனும் ஒரு சிறிய தொகையை செலுத்துவார். தற்சமயமும் வாரண்ட் நிலுவையில் உள்ளது.

7. மேட்டுர் நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கும் சேர்ந்த வாழ கோரி நான் தாக்கல் செய்த மனுவும் நிலுவையில் இருந்து பொழுது எனது கணவர் இரண்டாவது எதிரியான வினித்ரா என்பவரை சட்டத்திற்கு புறம்பான முறையில் கடந்த 2017ம் வருடம் ஜனவரி மாதம் 14ம் தேதி( தை 1ம் நாள்) கொளத்தூரில் நாங்கள் வசித்து வந்த வீட்டில் வைத்து திருமணம் செய்து கொண்டதாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணைக்கு செல்லும்போது தெரிந்து கொண்டேன். அதன் பிறகு மேற்படி எனது கணவரின் இரண்டாவது திருமணத்தை வினித்ராவின் அப்பா சந்துரு, மற்றும் அவரது தாயார் நல்லம்மாள் ஆகியோர் சேர்ந்து ஏற்பாடு செய்து திருமணம் செய்து வைத்துள்ளனர்.

8. 20.08.2018ம் தேதியில் எனது கணவருக்கும் இரண்டாவது திருமணம் செய்த வினித்ராவுக்கு சேலம் ஆரோக்யா மருத்துவமனையில் யஸ்வின்ராஜ் என்ற ஆண் குழந்தையும் பிறந்தது. ஆண் குழந்தை பிறந்ததற்கான பிறப்பு சான்று நகல்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதன்பின்னிட்டு எனது கணவர் வினித்ராவை தனது மனைவியாக குறிப்பிட்டு தனது மனைவியின் பெயரில் சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளார். கிரய ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

9. மேற்படி எனது கணவர் இரண்டாவது திருமணம் செய்து கொண்டது தொடர்பாக மேற்படி நபர்களுக்கு கடந்த 04.10.2025ம் தேதி உங்கள் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்ய கூடாது என்று கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதில் சந்துரு என்பவர் மட்டும் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்கி கொண்டார். மற்ற நபர்கள் வழக்கறிஞர் அறிவிப்பை வாங்க மறுத்துவிட்டார்கள். அஞ்சல் ஒப்புகை அட்டை திரும்பி வந்த கவர்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

10. எனது கணவர் இரண்டாவது திருமணம் செய்தது குறித்து நடவடிக்கை கேட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்க முயன்றபோது ஏற்கனவே நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை சுட்டி காட்டி புகாரை வாங்க மறுத்துவிட்டார்கள். அதனால் நான் இந்த தனி புகாரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.
11. முதல் திருமணம் அமலில் இருக்கும் நிலையில் எனது கணவர் வினித்ராவை சட்டத்திற்கு புறம்பான நிலையில் இரண்டாவது திருமணம் செய்து கொண்டதற்காகவும், திருமணத்தை சந்துரு மற்றும் நல்லம்மாள் சட்டத்திற்கு புறம்பாக நடத்தி வைத்ததற்காக தகுந்த தண்டனை வழங்கவும் எனது கணவர் பல்வேறு வகையில் எனக்கு கொடுமைகள் செய்ததற்காக உரிய தண்டனை வழங்கவும் மனு தாக்கல் செய்துள்ளேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-01.19PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**